ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2329/47 - 2023 අප්‍රේල් මස 28 වැනි සිකුරාදා - 2023.04.28

2329/47 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 21/ 1978 (X)(ஈ)

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்டு PV 9729 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான றோயல் இன்ஸ்டிடியூட் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2021, சனவரி 1 ஆந் திகதிய 2208/ 49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணை II இனை, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய அதன் நிரல் I இல் காணப்படும் “சர்வதேச பொருளியல் மற்றும் நிதியியல் வியாபார கௌரவ இளமாணி” என்னும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் மற்றும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.*

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. றோயல் இன்ஸ்டிடியூட் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்க்கும்போது, குறைந்தபட்சம் 120 திறமைச் சித்திகளை (SLQF) மட்டம் 6) பூர்த்தி செய்த இரண்டாம் மொழியொன்றாக ஆங்கிலம் கற்பித்தலில் கல்வி கௌரவ இளமாணி தொடர்பில், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில், ஆங்கிலம் ஒரு பிரதான பாடமாக உட்பட ஏதேனும் பாடத்துறையில் மூன்று (3) ‘சாதாரண சித்திகள்’ (S) அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் :



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2. றோயல் இன்ஸ்டிடியூட் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையான மீள் பரிசீலனைக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

**அட்டவணை II**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| இரண்டாம் மொழியொன்றாக ஆங்கிலம் கற்பித்தலில் கல்வி கௌரவ இளமாணி | பிஎட் கௌரவ (இரண்டாம் மொழியொன்றாக ஆங்கிலம் கற்பித்தல்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2023, ஏப்பிறல் 24.

EOG 04-0194/ 1

---

ச.வ.பி. 21/1978 (X)(ஈ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட GL 24 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) லிமிட்டெட் தொடர்பில் சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2022, திசெம்பர் 29 ஆந் திகதிய 2312/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணை II இனை, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய அதன் நிரல் I இல் காணப்படும் "வணிக நிருவாகத்தில் முதுதத்துவமானி" என்னும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் மற்றும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) லிமிட்டெட் ஆனது, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்க்கும்போது, குறைந்தபட்சம் 60 திறமைச் சித்திகளை (SLQF மட்டம் 10) பூர்த்திசெய்த கல்வி முதுமாணி தொடர்பிலும் பின்வரும் குறைந்தபட்சம் 30 திறமைச் சித்திகளை (SLQF) மட்டம் 9) பூர்த்திசெய்த கற்கைநெறிப் பணியுடனான கல்வி முதுமாணி தொடர்பிலும் பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்-

(அ) உயர் கல்வி அமைச்சினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஒரு கல்வி இளமாணிப் பட்டம் ;

(ஆ) உயர் கல்வி அமைச்சினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்தான ஒரு கல்விப் பட்டப்பின் திப்புளோமாவுடன் (PGDE) ஒரு இளமாணிப் பட்டம் ; அல்லது

(இ) ஆகக்குறைந்தது இயைபான இரண்டு ஆண்டு வேலை அனுபவத்துடன் உயர் கல்வி அமைச்சினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஒரு இளமாணிப் பட்டம்.

2. இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் ஆங்கிலம், சிங்களம் அல்லது தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படலாம்.

3. ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்தாண்டுகளுக்கொரு முறையான மீள் பரிசீலனைக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

**அட்டவணை** II

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| கல்வி முதுமாணி | எம்ஈடி |
| கற்கைநெறிப் பணியுடனான கல்வி முதுமாணி | எம்ஈடி (கற்கை நெறிப்பணியுடன்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2023*, ஏப்பிறல் *24*.

EOG *04-0194/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.